*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – IV, Issue - 1
November - 2019

# வெற்றிவேற்கை உணர்த்தும் வாழ்வியல் அறம்

நாகஜோதி.செ
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.
தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author: nagajyothi@vvvcollege.org**

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைத்தமிழர்களின் வாழ்க்கை அறம் சார்ந்ததாக இருந்தது. சங்க காலத்து மக்கள் 'ஈதல் இசைபட வாழ்தல்' என்பதை அறமாகக் கருதினர். சங்கம் மருவிய கால மக்கள் உயிர்க்கொலையற்ற வாழ்வினையும், பிறன்மனை நோக்கா பேராண்மையினையும், பொய்மையற்ற, களவற்ற வாழ்க்கையினையும் அறமாகப் பின்பற்றினர். இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் வாழ்ந்த மக்கள், பொருள் இல்லாருக்கு உணவும் உடையும் உறையுளும் தந்து உதவுவதை அறமாகக் கருத வேண்டும் என்பதாக மணிமேகலைக் காப்பியம் எடுத்தியம்பியுள்ளது. ஆறாம் நூற்றாண்டு காலத்திற்குப் பின் வாழ்ந்த மக்கள் இறைபக்தியோடு சமுதாயப் பணி செய்வதையும் இறைவனைப் போற்றி வாழ்வதையும் விரும்பினர். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் நல்ல புலமையாளனாகவும் நல்ல ஆட்சியாளனாகவும் வாழ்ந்த அதிவீரராம பாண்டிய மன்னன் 'வெற்றி வேற்கை' வழி தனிமனிதன் அறவழியில் செயல்படுவதன் அவசியத்தையும், குடும்ப வாழ்வில் மனிதன் பின்பற்ற வேண்டிய அறத்தினையும், சமூகத்தின் நன்மை கருதி மனிதன் பின்பற்ற வேண்டிய அறத்தினையும் வலியுறுத்தியுள்ளான். இத்தகைய வாழ்வியல் அறத்தை 'வெற்றி வேற்கை' வழி வெளிக்கொணர இவ்வாய்வு கருதுகிறது.

**முன்னுரை**

இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடியாக மட்டும் இருந்தால் சிறப்பன்று; இலக்கியம் நல்ல வாழ்வியலுக்கு வழிகாட்டியாக இருத்தல் வேண்டும் என்பர். இப்போக்கில் இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் எழுந்த வெற்றி வேற்கையும் வாழ்வியல் அறத்தைப் போதித்துள்ளன. கொற்கை நகரத்தை ஆண்ட பாண்டிய மன்னன் அதிவீரராமப்பாண்டியன் சிறந்த அரசனாகவும் நல்ல புலமையாளனாகவும் திகழ்ந்தான். இத்தகையோன் நைடதம்,

லிங்கபுராணம், காசிக்காண்டம், திருக்கருவை அந்தாதி, கூர்மபுராணம், வெற்றி வேற்கை ஆகிய நூல்களை எழுதிய சிறப்பிற்குரியவன். நறுந்தொகை என அழைக்கப்பட்ட வெற்றி வேற்கை 'நல்ல பாடல்களின் தொகுப்பு' என்ற பெருமை பெற்றுள்ளது. மானிடர்கள் நல்ல பழக்க வழக்கங்களை அறிந்து நன்னெறியில் செயல்பட வேண்டி நல்ல சொற்றொடர்களால் இந்நூல் அமைந்துள்ளது. எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் உள்ள இந்நூலில் தனி மனித வாழ்வியல் அறம், குடும்ப வாழ்வியல் அறம், சமுதாய வாழ்வியல் அறம் ஆகிய தன்மைகளை அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வாழ்வியல் அறம் - விளக்கம்**

அறப்பண்பு மனிதனை மனிதனாக வாழச் செய்யும்; இன்பம் சூழ்ந்த வாழ்வைப் பெறச் செய்யும்; இம்மையில் மட்டுமல்லாது மறுமையிலும் பயன் பெற வைக்கும். "அறம் என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல்லாகும். அறம், ஒழுக்கம், நேர்மை, நீதி, அடக்கம், கற்பு, மனத்தூய்மை, பெரியோரைப்போற்றல், எளியோரைத்தாங்குதல், வறியோருக்கு உதவுதல் முதலிய பல பொருள்களில் வருகின்றது."[1] என்பர். மனிதன் அறவுணர்வோடு வாழ்ந்தால் தானும் தன்னைச் சார்ந்த குடும்பமும், சமுதாயமும் பயன் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**தனிமனித வாழ்வியல் அறம்**

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வின் செம்மைக்குத் 'தன் கையே தனக்குதவி' என்பதைக் கருதி தனித்துச் செயல்பட்டு அறவழியில் வாழ முயற்சிக்க வேண்டும். ஆண், பெண் இரு பாலாரும் பண்பட்டு அறவழியில் செயல்படத் தூண்டுகோலாய் இருப்பது கல்வியாகும்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"[2]

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க மனிதனுக்குக் சிறந்த செல்வமாகிய கல்வி மனிதனின் பண்பை உயர்த்த வல்லது. இதன் அவசியத்தைக் கருதிய அதிவீரராம பாண்டியர்,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"[3]

என்றார். கல்வி ஒன்றே மனிதனைப் பெருமைப்படுத்தும். கல்வியால் உயர்ந்தவனே மேல் குலத்தவனாகக் கருதப்படுவான். அத்தகையோன் அறிவால் மேன்மை பெற்றுச் செயலில் குற்றமற்று இருப்பதே அழகு என்பதை மக்களுக்கு அறிவுறுத்தக் கருதிய பாண்டியர்,

"நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றலன் ஆயின் கீழ் இருப்பவனே" [4]

என்கிறார். வேதம் கற்பதில் ஆர்வமும், கடமையும், பெருமையும் கொண்டிருந்த அந்தணர்கள் காலையும் மாலையும் வேதம் ஓதி ஒழுக்கமான வாழ்வு வாழ்வதே அறம் எனக் கருதினர். அத்தகைய அந்தணனைப் பற்றி அதிவீரர்,

காலையும் மாலையும் நான்மறை ஓதா
அந்தணன் என்போர் அனைவரும் பதரே"[5]

என்றும் உணர்த்தியுள்ளார்.

அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை வருணத்தாரில் வணிகர் தன் பொருளாதாரத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டேயிருக்க வேண்டும். அதுவே அவருடைய தொழிலுக்கு அழகானது என்பதை வெற்றி வேற்கை

"வைசியர்க்கு அழகு வளர்பொருள் ஈட்டல்"[6]

என்கிறது. வேளாளர் எல்லா உயிர்களும் வாழ வழிகாட்டுபவர். எனவே ஏர் உழவர் தம் கடமையிலிருந்து தவறாமல் இருக்க வேண்டும் என்பதாக வெற்றிவேற்கை,

"உழவர்க்கு அழகு ஏர்உழுதூண் விரும்பல்"[7] எனக் கூறியுள்ளது. இத்தகைய தன்மையில் வேதியரும், வணிகரும், வேளாளரும் கொள்கையோடு செயல்படுவதே அறமாகும் என வலியுறுத்தியுள்ளது. மேலும் மனிதர்கள் தம் செயல்பாட்டால் தமக்கு உயர்வையோ, தாழ்வையோ பெறுகின்றனர் என்பதை வெற்றி வேற்கை,

"பெருமையும் சிறுமையும் தான் தர வருமே"[8] என்கிறது.

பெண் மென்மையான இயல்பினள்; அன்பின் உறைவிடம்; அடக்கத்தின் சின்னம். எனவே அவள் மென்மையாகவும், அன்பாகவும், அடக்கமாகவும், பொறுமையாகவும், யாரிடமும் எதிர்த்து பேசாதிருக்க வேண்டும் என்பர். இதனைக் கருதிய அதிவீரர்

"பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல்"[9] என்கிறார். இப்போக்கின் வழிச் செயல்படுவதே ஒரு பெண்ணுக்கு அழகும் அறமும் ஆகும் என வலியுத்துகிறார். கல்வியில் மேம்பட்ட ஒருவன் நல்ல நூற்களைக் கசடறக் கற்று உணர்ந்து நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் வழி செயல்பட வேண்டும் என்பதாக அதிவீரர்,

"அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்"[10] என்கிறார். ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்தை உயிராகக் கருத வேண்டும். செல்வத்தில் சிறந்தவன் வறுமையை அடைந்தாலும், வறுமை நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவனாக இருந்தாலும் எவரிடமும் இரந்து நிற்றலோ களவாடுவதோ கூடாது என்பதை வலியுறுத்துவதாக வெற்றிவேற்கை,

"வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை"[11] என்கிறது. இதன்மூலம் ஆண், பெண் ஆகிய இரு இனத்தாரும் தம் எண்ணத்தில், கொள்கையில் அறத்தைப் பின்பற்றினால் குடும்பமும், சமுதாயமும் செம்மையடையும்.

## குடும்ப வாழ்வியல் அறம்

இல்லறம் என்னும் நல்லறத்தைப் போற்றுவதும், குடும்பத்தைக் கோவிலாகக் கருதுவதும் கணவன் - மனைவி இருவருக்கும் அவசியமானதாகும். ஒவ்வொரு கணவனும் நல்ல முறையில் பொருளீட்டித் தன் சுற்றத்தாரைப் பாதுகாத்தல் அறமாகும் என்பதை வெற்றிவேற்கை,

"செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்"[12] என்கிறது. செல்வந்தனாக இருப்பவன் தன் கிளையைப் போற்றுவதே அழகானது; அர்த்தமுள்ளது. இத்தகையோன் தன் சுற்றத்தைக் காப்பது மட்டுமன்று; பொருளற்ற ஒருவன் இரந்து நின்றால் செல்வந்தன் செய்ய வேண்டிய கடமையினை,

"இரந்தோருக்கு ஈவதும் உடையோர் கடனே"[13] என்கிறது. இல்லறத்தார் ஒவ்வொருவரும் விருந்து உபசரித்தலைத் தன் கடமையாகக் கருதுதல் வேண்டும். அறுசுவை உணவினைச் சமைத்து குடும்பத்தார் தனித்து உண்டால் அவ்வுணவின் சுவை இனிமையாக இருக்காது. ஆனால் விருந்தினரை அழைத்து அவர்களோடு சேர்ந்து உண்டால் உணவின் அருமையை உணர முடியும். இதனை வலியுறுத்தக் கருதிய அதிவீரர்,

"உண்டிக்கு அழகு விருந்தொடு உண்டல்"[14] என்கிறார். குடும்பத்தில் ஒவ்வொரு மனைவியும் தன் கணவனைக் கண்கண்ட தெய்வம் எனக் கருதி அவனுக்கு வேண்டியவைகளை நிறைவேற்றுதல் வேண்டும். அவன் சொல்லை மீறி செயல்படுவதோ, எதிர்த்துப் பேசுவதோ அறமன்று என்பதாக வெற்றி வேற்கை,

"குலமகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்"[15] என்கிறது. குடும்பத்தலைவன் தன் மனைவியை 'மனைக்கு விளக்கம் மடவார்' எனக் கருதி வாழ வேண்டும். பிறன் மனை நோக்காத பேராண்மையுடையவனாக இருத்தல் வேண்டும். எச்சூழலிலும் தன் மனையாளை அவமதித்தலோ, வெறுத்து ஒதுக்குதலோ அறமன்று என்பதை,

"தன் மனையாளைத் தாய்மனைக்கு அகற்றி
பின்பவட் பாரா பேதையும் பதரே"
"தன்மனை யாளைத் தனிமனை இருத்திப்
பிறன்மனைக்கு ஏகும் பேதையும் பதரே"[16]

என்கிறது. எனவே மனத்தூய்மையோடு இல்லறம் நடத்துதல் ஆண் பெண் இருவருக்கும் சிறந்தது என அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சமுதாய வாழ்வியல் அறம்**

'தனிமரம் தோப்பாகாது' என்ற பழமொழிக்கேற்ப மனிதன் தனித்து வாழ்வது இயலாது என்பதை உணர்ந்தான். எனவே சமுதாயம் என்னும் கட்டுக்குள் வாழ முயற்சித்தான். அத்தகையோன் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து கூடி வாழும் இயல்பைப் பெற்றான். இப்போக்கு மனிதப் பண்பின் வளர்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைந்தது. ஒருவனது எண்ணமும், கொள்கையும் குழுவின் தலைவனிடம் கூறப்பட்டு பரிந்துரைக்கப்படுவதாக அமைந்தது. எனினும் ஒரு குழுவின் தலைவனுக்கும் தலைவன் தேவைப்பட்டது பல்வேறு மக்களை ஆட்சி செய்யும் தலைவன் மக்களால் 'கோ' என அழைக்கப்பட்டான். குடிகளைக் காக்க வேண்டிய அரசன் மக்களுக்குத் துன்பம் தராமல் ஆட்சி செய்வதே அரச அறமாகும். 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்ததே மலர்தலை உலகம்' எனக் கருதும் மக்களை 'எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை' எனக் கருத வேண்டும். மன்னன் தன் குடிக்கீழ் வாழும் மக்களிடம் அதிகமான வரிச்சுமையை விதித்தல் கூடாது. நாட்டில் குற்றம் குறைகள் நிகழ்ந்தால் அதனைத் தீர ஆராய்ந்து நடுவு நிலைமையோடு நீதி வழங்கி ஆட்சி செலுத்துதல் அறமாகும். இதனைக் கருத்தில் கொண்ட வெற்றி வேற்கை,

"மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை"[17] என்கிறது.

மன்னன் மக்களின் துன்பங்களையும் குறைகளையும் தீர்க்கும் விதத்தில் ஆட்சி செலுத்த வேண்டும். அங்ஙனமின்றி மக்கள் மீது அதிகமான வரிச்சுமையிட்டு அவர்களின் செல்வத்தை அபகரிக்கும் நிலையில் செயல்பட்டால் அம்மன்னன் நெல்லின்றி இருக்கும் பதர் போன்றவனாவான் என்பதாக வெற்றி வேற்கை,

"குடிஅலைத்து இரந்து கோலொடு நின்ற
முடிஉடை இறைவனாம் மூர்க்கனும் பதரே"[18]
என்கிறது.

இத்தகைய மன்னனை நல்வழிப்படுத்துவதும் அறமற்ற தன்மையில் செயல்படுவதால் ஏற்படும் நன்மை தீமைகளையும் கூறி முறைப்படுத்துவதும் அமைச்சரின் கடமையாகும். ஒரு நாட்டை பகைவரிடமிருந்து காக்கும் கடமைக்குரியவன் படைத்தலைவனாவான். அவன் பகைவருக்கு அஞ்சாமல் வீரமிக்கவனாகச் செயல்படுதல் அறமாகும். இதனை அதிவீரர்,

"மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்"
"தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை"[19] என்று உணர்த்தியுள்ளார். இதன்மூலம் அரசன் அறத்தோடு ஆட்சிசெய்தால் அந்நாடு வளம் பெறும்; மக்கள் பயன் பெறுவர் என்பதில் சந்தேகமில்லை. இங்கு சங்க கால ஔவையாரின் கூற்றாகிய

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"[20] என்ற வரி நினைவுகூறத்தக்கதாகும்.

**முடிவுரை**

மனிதன் மனிதனாக வாழ வழி காட்டுவது அறமாகும். எனவே 'அறம் செய்ய விரும்பு' என்றார் ஔவையார். இத்தகைய அறம் எந்த விதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காதது. பிரதிபலன் பார்த்து செய்தால் அது அறமன்று. மனிதன் ஒவ்வொருவரும் முதலில் தனக்குத் தானே அறம் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். அவ்வறம் தன் மனதிற்கும் தன் வழிகாட்டுதலுக்கும் செம்மையாக இருக்கும். இத்தகைய அறச்சிந்தனை குடும்பத்திலும் அறம் செய்ய வழி காட்டும். இதனைக் கருதியே சான்றோர் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்றனர். தனிமனிதன் தன்னை நல்வழிப்படுத்த அறவழியில் செயல்படுவதும், இல்லறத்தார் தன்னைச் சுற்றியுள்ள உற்றார் உறவினர்களிடத்திலும் அயலாரிடத்திலும் அறம் செய்வதும் சிறப்பாகும் என அதிவீரர் வலியுறுத்தியுள்ளார். தனி மனிதன் முன்னேறினால் குடும்பம் முன்னேறும்; குடும்பம் முன்னேறினால் சமுதாயம் முன்னேறும்; சமுதாயம் முன்னேறினால் நாடு முன்னேறும் என்பர். இக்கூற்றினை நிலைநாட்டுவது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும் என்பதை வலியுறுத்தும் விதத்தில் மனித வாழ்வியல் அறத்தை வெற்றி வேற்கை அழகாக வெளிப்படுத்தியுள்ளமையை அறியமுடிந்தது.

**அடிக்குறிப்புகள்:**

1. ஔவைத்தமிழ் ஆய்வுக் கோவை, தொகுதி -2, ப-61
2. திருக்குறள் பா- 400
3. வெற்றி வேற்கை பா-35
4. மேலது பா-37
5. மேலது பா-65

6. மேலது பா -14
7. மேலது பா-15
8. மேலது பா- 3
9. மேலது பா- 58
10. மேலது பா- 10
11. மேலது பா-12
12. மேலது பா-69,70
13. மேலது பா- 5
14. மேலது பா- 18
15. மேலது பா- 8,9
16. புறநானூறு பா-187, வரி-3-4